**மத்திய கலாசார நிதியம் - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

மத்திய கலாசார நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமத்துடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தால் முன்னைய காலப்பகுதியின் தவறுகளை சரி செய்தல் தொடர்பாக இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தி நடைமுறைப்படுத்தும் போது உரிய சரிசெய்தல்கள் தொடர்பான வெளிப்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பாக அந்த நியமத்தின் 54 ஆம் பந்தியின் (அ) முதல் (ஈ) வரை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் நிதியத்தால் மீண்டும் வெளியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக உரிய விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டுகளில் இருந்து முன்னைய காலப்பகுதிக்குரிய பிழைகள் சரி செய்வதற்குரிய தகவல்கள் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் நியதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் நிறுவனத்தின் ஊழியர் நலன் கடப்பாடுகளை கணிப்பிடும் போது ஆயுட்கால முறைமை பயன்படுத்த வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 690,965,817 ஆன பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யும் போது ஆயுட்கால முறைமை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியம இலக்கம் 19 இன் பிரகாரம் ஆயுட்கால முறை பயன்படுத்தி ஊழியர் நலன் கணிப்பிடும் போது மேலும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் என்ன என்பதை பரீட்சித்து எதிர்காலத்தில் கணக்கீட்டு நியம இலக்கம் 19 இற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதற்கு கவனத்தில் | நியமத்தின் நியதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிறுவனத்தால் பொருண்மையான முன்னைய காலப்பகுதியின் தவறுகள் கண்டறியப்பட்ட பின்னர் அந்த தவறுகளை சரி செய்தல் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் 47 ஆம் பந்தியின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2018 ஆம் ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மூலம் சுட்டிக்காட்டப்பட் கீழே காண்பிக்கப்படுகின்ற முன்னை காலப்பகுதிக்குரிய தவறுகளுக்குரிய சரி செய்தல்கள் அதற்கு இணங்க மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகளை சரி செய்வதற்குத் தேவையான சீராக்கங்கள் 2020 ஆம் ஆண்டின் கணக்குகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நியமத்தின் நியதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (i) | 2018 ஆம் ஆண்டிற்கு உரிய ரூபா 1,702,055 வட்டி ஆண்டு வருமானமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக பெறவேண்டிய வட்டி வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்ட தவறை சரி செய்யும் போது அந்த ஆண்டில் கிடைக்க வேண்டிய வட்டிக் கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டில் ‘‘07 நாள் அழைப்பு வைப்பு மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம்’’ கணக்கில் (INTEREST INCOME FROM 7 DAY CALL DEPOSIT AND FD) வரவு வைத்து முன்னைய ஆண்டின் சீராக்க கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் வட்டி வருமானம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2018 ஆம் ஆண்டின் நிலையான வைப்பிற்காக கிடைக்க வேண்டிய வட்டி ரூபா 916,438 குறைவாக கணக்கீடு செய்யப்பட்டு தவறை சரி செய்யும் போது ரூபா 27,382,801 ஆக பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக முறையே பெறவேண்டிய வட்டி கணக்கு மற்றும் திரண்ட நிதியம் ரூபா 26,466,363 வீதம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்ற 09 ஊழியர்களுக்காக 2020 ஆம் ஆண்டின் போது பணமாக செலுத்தப்பட்ட ரூபா 4,991,301 ஆன பணிக்கொடை தொகை 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியவையாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இதனைத் தொடர்ந்தும் பரீட்சித்து 2020 ஆம் ஆண்டின் கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவினங்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய மோட்டார் வாகன காப்புறுதிச் செலவினம் ரூபா 1,061,919 ஆக இருந்த போதிலும் எதிர்காலத்தில் செலுத்தும் செலவினத்தையும் உள்ளடக்கி ரூபா 1,800,129 ஆக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் காப்புறுதிச் செலவினம் ரூபா 738,210 இனால் அதிகரித்தும் எதிரகாலத்தில் செலுத்தும் அளவினால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிதியத்தின் ஆயுள் காப்புறுதி மற்றும் மோட்டார் வாகன காப்புறுதி மேவுகை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தவறு தொடர்பாக மேலும் பரீட்சித்து அதற்குரிய சரி செய்தல்கள் 2020 ஆம் ஆண்டில் இறுதிக் கணக்கில் சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவினங்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | நிதியத்தால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான கணக்காய்வுக் கட்டணத்திற்காக முறையே ரூபா 366,000 மற்றும் ரூபா 138,450 குறைவாக ஒதுக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக திரண்ட மிகை ரூபா 366,000 இனால் அதிகரித்தும், மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 138,450 குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டிற்குரிய இறுதிக் கணக்குகள் 2020 ஆம் ஆண்டில் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்டமையால் இந்த கணக்காய்வுக் கட்டணத்திற்கான பட்டியலுக்குரிய பெறுமதியில் அந்தக் கணக்குகளில் சீராக்குவதற்கு முடியாதிருந்தது. எதிர்வரும் ஆண்டு முதல் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது அறிக்கை யிடப்படுகின்ற திகதியின் பின்னர் மேற்கொள்கின்றமை தொடர்பாக கவனம் செலுத்தி இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமம் 06 இன் பிரகாரம் உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆண்டிற்குரிய செலவினங்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிச் செயலாற்றல் கூற்றின் பிரகாரம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிக்கொடைகளுக்கான ஒதுக்கீடுகள் ரூபா 47,582,236 ஆக இருந்த போதிலும் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் 2020 ஆம் ஆண்டு முதல் காசுப்பாய்ச்சல் கூற்று சரியான | காசுப்பாய்ச்சல் கூற்று நியமத்தின் பிரகாரம் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உருவான தேறிய காசு பாய்ச்சல் கணிப்பிடும் போது அப்பெறுமதி ரூபா 9,691,482 ஆக காசல்லா மாற்றங்களின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது. | முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | திரண்ட மிகை காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளக்கப்படாது இருந்த போதும் திரண்ட மிகையாக ரூபா 102,485,286 செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான காசுப் பாய்ச்சலின் கீழும், ரூபா 5,005,053 நிதிச் செயற்பாடுகளின் மூலம் உருவான காசுப் பாய்ச்சலின் கீழும் காண்பிக்கப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்றில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் 2020 ஆம் ஆண்டு முதல் காசுப் பாய்ச்சல் கூற்று சரியான முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | காசுப்பாய்ச்சல் கூற்று சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஊ) | நிதியத்தால் பயன்படுத்தப்படுகின்ற பெறுமதி உறுதிப்படுத்தப்படாத கணக்கீட்டு மென்பொருள் (Sage 50) மற்றும் 2018 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 182,500 ஆன சம்பள மென் பொருளின் பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் கற்பனைச் சொத்தின் கீழ் காண்பிக்கப்படாது இருந்ததுடன் இது தொடர்பாக கடந்த ஆண்டில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2020 இன் இறுதிக் கணக்குகள் மீண்டும் தயாரிக்கும் போது உரிய சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மென்பொருள்களின் கிரயம் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) | நிதியத்தால் கணக்கீட்டு மென்பொருளில் பேணிச் செல்லப்படுகின்ற காசேட்டின் பிரகாரம் நடைமுறைக் கணக்கு இலக்கம் 1630469 மாதாந்த காசுப் பெறுவனவு மற்றும் செலுத்துதலின் கொடுப்பனவுகளின் பெறுமதிகள் மீதி மற்றும் மாதாந்த வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் மாதாந்த காசுப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு மீதிகளுக்கு இடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் 12 மாதங்களில் காசுப் பெறுவனவுகளுக்கு இடையே ரூபா 12,491,566 மற்றும் காசுக் கொடுப்பனவுகளுக்கு இடையே ரூபா 7,405,490 வேறுபாடு காணப்பட்டது. | நிதியத்தின் நடைமுறைக் கணக்கு இலக்கம் 1630469 இற்கு உரிய sage 50 கணக்கீட்டு மென்பொருளில் பெறுவனவு, கொடுப்பனவு கணக்கீடு செய்வதற்காக கணக்கீட்டுக் குறியீடு பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்த கணக்கீட்டுக் குறியீடுகள் 02 இன் பெறப்பட்ட தரவுகள் தயாரிக்கப்பட்ட காசேடு இதனுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் சில மாதங்களில் வங்கி இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்ட மாதாந்த காசுப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு மற்றும் காசேட்டு மீதியுடன் இணங்காமைக்கான காரணம் மற்றும் அந்த பெறுமதிகளின் விபரங்கள் இதனுடன் சமர்ப்பிக்கப்படுகின்றது. எனினும் இந்த வேறுபாடுகள் காசேட்டின் மீதியில் தாக்கமளிக்காது | கணக்கீட்டு மென்பொருளில் தரவுகளில் சரியாக உறுதிப்படுத்திக் கொள்ளப்பட்ட பின்னர் குறிப்பிடுதல் மற்றும் மாற்றங்களுக்கான நாட்குறிப்புக்குள் இடப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஏ) | சேவைக்காலம் முழு வருடத்தை பூர்த்தி செய்யாத போது முழு வருடம் ஒன்றாகக் கருதி பணிக்கொடை மதிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக நிதியத்தின் பிரதான அலுவலகம் மற்றும் அபயகிரி செயற்திட்டத்தின் சேவையில் ஈடுபட்டிருந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் 106 பேர்களுக்காக ரூபா 2,006,050 அதிகரித்து பணிக்கொடை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | பணிக்கொடை ஒதுக்கீடு செய்யும் போது சேவைக் காலம் முழு வருடம் பூர்த்தி செய்யாதிருந்த போதிலும் முழுவருடமாகக் கருதி பணிக்கொடை ஒதுக்கீடு கணிப்பிடுதல் நிறுவனத்தின் முன்னைய ஆண்டில் இருந்து மேற்கொள்ளப்படுகின்ற கொள்கை ஆகும். இது மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியாக இருந்தமையால் இந்த முறையில் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2024 ஆம் ஆண்டு முதல் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (ஐ) | நிதியத்தின் பிரதான அலுவலகம் மற்றும் அபயகிரி செயற்திட்டத்தில் சேவையாற்றிய 23 ஊழியர்களுக்காக 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் நிதியத்தால் அதற்கான காரண விடயங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | இது தொடர்பாக கணக்காய்விற்கு கோரப்பட்ட தகவல்கள் பதிவேடுகளுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | விசேட நிதிய செயற்திட்டம் II விசேட நிதிய செயற்திட்டம் 5 விசேட நிதியம் செயற்திட்டம் 01 | 8,960,632<br>4,757,900<br>676,432 | பதிவேடுகள், கோவைகள், பட்டோலைகள் | 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் இயலுமான வரை இந்த செயற்திட்டம் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு முயற்சி எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய பதிவேடுகள், கோவைகள் மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | அமெரிக்க டொலர் சேமிப்புக் கணக்கு | 15,578,717 | காசேடு, மேலதிக பட்டோலை, உரிய செயற்திட்டத்தின் விபரங்கள் | 2024 திசெம்பர் மாதம் முதல் இதற்காக எழுத்து மூல காசேடு பேணிச் செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நாளாந்த டொலர் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளை பதிவதற்காக மேலதிகப் பதிவேடு அல்லது காசேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (இ) | விழா முற்பணம், வீடமைப்புக் கடன், வாகனக் கடன், இடர் கடன் மீதி | 269,564,775 | கடன் பதிவேடு, கடன் அறிக்கை, அறவிடல் விபரம், பட்டோலை, காலப்பகுப்பாய்வு | 2019.12.31 இல் உள்ளவாறு பெறப்பட்ட கடன்கள் தொடர்பாக நிரந்தர பதவியணியினருக்கு வழங்கப்பட்ட கடனில் உள்ளடக்கப்பட்ட விரிவான பட்டோலை தற்போது கணக்காய்விற்கு வழங்கப்பட்டுள்ளது. தொழிலாளர் பதவியணியினருக்கு உரிய கடன் தொடர்பான விரிவான பட்டோலை தயாரிக்கப்படாது இருந்ததுடன் இந்த பதிவேடும் தற்போது தயாரிக்கப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டு முதல் இந்த 02 பதிவேடுகளையும் சரியான முறையில் நிதிக் கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு அதனுடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கடன் பதிவேடு, கடன் அறிக்கை, அறவிடல் விபரம், பட்டோலை, காலப் பகுப்பாய்வு என்பன கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | அறவிடமுடியாக் கடன் ஒதுக்கீடுகள் | 1,430,741 | கணிப்பிடப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் | 05 வருடங்கள் முதல் அறவிடப்படாத கடன் பட்டோர் மீதிக்காக அறவிட முடியாக் கடன் ஒதுக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் போது 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர் முன்னிருந்து கொண்டுவரப்படுகின்ற கடன்பட்டோர் தகவல்களுடன் கோவையினை கண்டறிவதற்கு வசதியீனமாக உள்ள இந்த கடன்பட்டோர் மீதி தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்தியவுடன் கடன்பட்டோர் பகுப்பாய்வு அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அறவிட முடியாக் கடன் கணிப்பிடுவதற்கு உரிய தகவல்கள் கணக்காய்விற்கு சமரப்பிக்கப்படல் வேண்டும். |
| (உ) | மீள செலுத்த வேண்டிய | 9,776,783 | விரிவான பட்டோலை | ரூபா 9,776,783.00 ஆன கேள்வி வைப்பிற்காக தற்போது தயாரிக்கப்பட்ட | பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வைப்புக்கள் | | | பட்டோலை ஒன்று காணப்படாது இருந்ததுடன் தயாரிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஊ) | நிலையான வைப்பு முதலீடு | 6,033,058,973 | நிலையான வைப்புப் பதிவேடு, நிலையான வைப்பு சான்றிதழ், புதுப்பித்தல் அறிவித்தல், வங்கி மீதி குறிப்புக்கள் | 2019 ஆம் ஆண்டிற்கான நிலையான வைப்புக்களுக்கு உரியதாக பேணிச் செல்லப்படுகின்ற கோவைகள் மற்றும் வங்கி மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் முன்னர் உறுதிப்படுத்தப்பட்ட நிலையான வைப்புப் பிரதியை உள்ளடக்கிய முறையான பிரகாரம் கோவை ஒன்று பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் பிரதிகளை உள்ளடக்கி (உறுதிப்படுத்தப்படாத) பேணிச் செல்லப்படுகின்ற கோவை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு முதல் இந்த நிலையான வைப்புக் கோவையினை சரியான பிரகாரம் பேணிச் செல்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலையான வைப்புப் பதிவேடு, நிலையான வைப்புச் சான்றிதழ், புதுப்பித்தல் அறிவித்தல், வங்கி மீதி உறுதிப்படுத்தல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (எ) | நிலையான சொத்துக்கள், திரண்ட பெறுமானத் தேய்வு<br>ஒதுக்கம், வருடாந்த பெறுமானத் தேய்வு | 1,772,690,344<br>912,564,770<br>90,678,860 | நிலையான வைப்புப் பதிவேடு மற்றும் விரிவான பட்டோலை | 2019.12.31 இல் உள்ளவாறு நிலையான வைப்புப் பதிவேடு மற்றும் பெறுமானத் தேய்வு கணிப்பிடலின் விரிவான பட்டோலை 2024.12.02 ஆந் திகதிய CCF/DF/01/143 கடிதத்தின் மூலம் கணக்காய்விற்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | மொத்த பெறுமதியை உறுதிப்படுத்துகின்ற பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாது இருந்தமையால் மொத்த பெறுமதியை உறுதிப்படுத்தும் வகையில் பட்டோலை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | முதலீட்டு வருமானம்<br>பெற வேண்டியவை வ ரூபா நிலையான | 615,255,845<br>428,353,909 | நிலையான வைப்பு சான்றிதழ் புதுப்பித்தல் அறிவித்தல், மற்றும் வங்கி | 2019 ஆம் ஆண்டில் முதலீட்டு விபரங்களை உள்ளடக்கி ரூபாவில் நிலையான வைப்பு மற்றும் அமெரிக்க டொலர் நிலையான வைப்பிற்காக | வருமானம் கணிப்பிடுதலை சரியாக உறுதிப்படுத்துவதற்குரிய எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வைப்பு வட்டி | | மீதி சான்றிதழ் | பெறவேண்டிய வட்டி முதலீட்டு வருமானம் கணிப்பிடப்பட்ட பட்டோலை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| | பெற வேண்டியவை அமெரிக்க டொலர் நிலையான வைப்பு வட்டி | 25,320,591 | | | |
| (ஐ) | பிற்போட்ட வருமான செலவினம் | 21,486,076 | செலவின பட்டோலை | இது தொடர்பாக பரீட்சித்து எதிர்காலத்தில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | செலினங்களுக்கு உரிய பட்டோலை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஒ) | நானாவித கடன் பட்டோலை | 2,075,317 | கடன்பட்டோர் பதிவேடு விரிவான பட்டோலை | நானாவித கடன் பட்டோர் மீதிக்குரிய பட்டோலை ஒன்றின் வரைவு அறிக்கை பதில் ஒன்றாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | இந்த மீதியின் ஆரம்ப மீதியாகக் காண்பிக்கப்பட்ட பெறுமதி மற்றும் இனங்காணப்படாத மீதியாகக் காண்பிக்கப்பட்ட பெறுமதியும் காண்பிக்கப்படுகின்றமையால் நிதிக் கூற்றில் காண்பிக்கப்படுகின்ற மீதி பகுப்பாய்வு செய்து பட்டோலை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | நடைமுறை வேலை | 212,280,442 | மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் நடைமுறை வேலையில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் | 2019.12.31 இல் உள்ளவாறு மூலதன பூர்த்தி செய்யப்படாத வேலை ரூபா 212,280,442 இற்கான பட்டோலை தற்போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விரிவான தகவல்களை வழங்குமாறு நிறுவனத்தின் அபிவிருத்திப் பிரிவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | விரிவான பட்டோலை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**1.6. பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 முற்பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதியத்தின் கீழ் காணப்படுகின்ற செயற்திட்டம் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை கட்டி எழுப்புவதற்காக நிதியத்தின் | இந்த முற்பணங்களுக்கு இடையே Challenger Lanka நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 1,382,054.60 மீதி பொலன்னறுவை தொல்பொருளியல் கட்டித்தில் | முற்பண மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர்கள், வெளித்தரப்பினர்கள் மற்றும் ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களுக்கு இடையே 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்க்கப்படாத முற்பணம் மீதி ரூபா 550,101,173 ஆகும். அதில் ரூபா 10,861,799 தொகை 05 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் இந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நிதியத்தால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் இந்த மீதிகளின் தற்போதய நிலமை தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளக நுழைவு வீதிக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக அதற்குரிய பணிகள் கையளிக்கப்பட்ட ஒப்பந்தக் கம்பனிக்கு 2001.03.28 ஆந் திகதி செலுத்தப்பட்ட முற்பணம் ஆகும். இது தொடர்பாக கொழும்பு வணிக நீதிமன்றத்தில் வழக்கு இலக்கம் HC/ARB/189/2012 ஆக வழக்கு ஒன்று நடைபெறுகின்றது. Advance Replica இன் கீழ் 2014 ஆம் ஆண்டில் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்காக இசுறு இஞ்சினியரிங் நிறுவனத்திற்கு ரூபா 8,261,536.18 தொகையும், M.S.P.N குமார என்பவருக்கு ரூபா 1,140,000.00 முற்பணத் தொகை செலுத்தப்பட்டுள்ளது. எனினும் இந்த கட்டிடத்தின் வேலைகள் இன்னும் பூர்த்தி செய்யப்படாமையின் காரணமாக இந்த முற்பணத்தை தீர்த்து வைப்பதற்கு முடியாதுள்ளது. 2025 ஆம் ஆண்டின் வேலைத் திட்டத்தில் இந்த கட்டிடத்தின் நிர்மாணப் பணிகளை மீண்டும் உள்ளடக்கி அந்தக் கட்டிடத்தின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டமையால் அதன் பின்னர் இந்த முற்பணத் தொகையை தீர்த்து வைப்பதற்கான இயலுமை காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 126,746,674 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,917,029,717 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 2,043,776,391 வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு டிக்கட் சீட்டுக்கள் மற்றும் அச்சிடல் வருமானம் மற்றும் ஏனைய வருமானம் ரூபா 930,230,198 இனால் குறைவடைந்தமையும் சம்பளம் மற்றும் ஊதியம், வழங்கல் மற்றும் பணிக்கொடை மற்றும் ஏனைய செலவினம் ரூபா 1,047,345,535 இனால் அதிகரித்தமையும் பிரதான காரணமாக இருந்தது.

**3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**3.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய இலக்கம் PF/423 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3 பந்தி (புதிய சுற்றறிக்கையான 2020 ஆகஸ்ட் 28 அந் திகதிய 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 15 ஆம் | 2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கும் போது தீர்மான இலக்கம் 212.02.01 இன் பிரகாரம் 2015 முதல் 2019 வரையான காலப்பகுதிக்காக முழுமையான கணக்காய்வு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு வருடாந்த அறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் |

| | | |
|---|---|---|
| பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரமாணம்) இன் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வரைவு ஆண்டறிக்கை மற்றும் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 04 வருடங்கள் 06 மாதங்களுக்கு அண்ணளவான கால தாமதத்துடன் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2024 ஆகஸ்ட் 09 ஆந் திகதியும் வரைவு வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2024 ஆகஸ்ட் 27 ஆந் திகதியும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டடிருந்தது. அதன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் அந்த காலப்பகுதிக்காக விசேட கணக்காய்வு மேற்கொண்டு அறிக்கை ஒன்று 2022.03.14 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளது. இந்த விடயங்களை காரணமாகக் கொண்டு 2018 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பித்தல் தாமதம் அடைந்திருந்தது. எனினும் 2019, 2020, 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளின் நிதிக் கூற்றுக்கள் குறித்துரைத்த திகதியில் தயாரித்து பூர்த்தி செய்யப்படும் என அறிக்கப்பட்டுள்ளது. | தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய இலக்கம் PF/423 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 4.4 பந்தி (புதிய சுற்றறிக்கையான 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(உ) பிரமாணம்) இன் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கை மற்றும் நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய அறிக்கை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2015 ஆம் ஆண்டு வரை அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |